***DEPOSITION OF WITNESS***
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**
**THANJAVUR AT KUMBAKONAM**

**CC No.71/2023**

**PW: 7**

| | | | |
|---|---|---|---|
| Name : | திரு. திருநாவுக்கரசு | Taluk : | கும்பகோணம் |
| Father's Name : | திரு.மகாலிங்கம் | Calling : | LW18 |
| Village : | கும்பகோணம் | Age : | 61 |

Solemnly affirmed by Thiru.X.Gilbert Maria Julian, Bench Clerk Grade II in accordance with the provisions of The Oaths Act, 1969 (Act 44 of 1969) on the 23rd day of June 2026.

Signature of Witness.

(Accused present. Assistant Public Prosecutor Grade II Present. Defence counsel present)

முதல் விசாரணை :

நான் தமிழ்நாடு காவல் துறையில் பணிபுரிந்து ஓய்வு பெற்று தற்போது சீனிவாசநல்லூரில் வசித்து வருகிறேன். கடந்த 03.12.2022-ஆம் தேதி மாலை 16.00 மணியளவில் கும்பகோணம் போக்குவரத்து புலனாய்வு பிரிவு சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது அ.சா.1 கணேசன் என்பவர் அவரது அண்ணன் காமராஜ் ஓட்டி விபத்திற்குள்ளான டிவிஎஸ் எக்சல் TN55 AR 1135 என்ற பதிவெண் கொண்ட இருச்சக்கர வாகனத்துடன் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமான புகார் மனுவினை பெற்று கும்பகோணம் போக்குவரத்து புலன் விசாரணைபிரிவு குற்ற எண்.60/2022 சட்டப்பிரிவு 279, 337 இதச ன் படி முதல் தகவல்

அறிக்கை பதிவு செய்தேன். மேற்படி முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆகும். பின்னர் அன்றைய தினமே மாலை 17.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் பாலு, சர்புதீன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்தேன். பார்வை மகஜர் அ.சா.ஆ.5 ஆகும். மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6 ஆகும்.

2) பார்வை மகஜர் சாட்சிகளை தனித்தனியே விசாரித்துவாக்குமூலம் பதிவு செய்தேன். சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகள் செந்தில், ஆகாஷ், பாண்டியன் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் தஞ்சாவூர் மருத்துவ கல்லூரி மருத்துவமனை சென்று காயம்பட்ட காமராஜை பார்த்தபோது அவர் தொடர்ந்து மயக்க நிலையில் இருந்ததால் அவருடன் இருந்த கணேசன், சுப்பிரமணியன் ஆகியோரிடம் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து நிலையம் வந்து 15.12.2022 அன்று நிலையத்தில் இருக்கும்போது விபத்தை ஏற்படுத்திவிட்டு நிற்காமல் சென்ற பார்த்தீபன் த/பெ. மதியழகன் என்பவரை மதன்ராஜ் த/பெ. கலியமூர்த்தி அதே ஊரை சேர்ந்தவர் மற்றும் பயணிகள் ஆட்டோ TN68 W 7822 என்ற பயணிகள் ஆட்டோவுடன் எதிரி காவல் நிலையத்தில் ஆஜர்ப்படுத்தினார். அவரை காரணம் கூறி கைது செய்து தக்க இருநபர் ஜாமீனில் விடுவித்தேன். பின்னர் மேற்படி பயணிகள் ஆட்டோவை மோட்டார் வாகன ஆய்விற்கு அனுப்பி வைத்தேன். சிகிச்சையில் இருந்த காமராஜ் சிகிச்சை பலனளிக்காமல் 22.12.2022 அன்று இறந்து விட்டார் என கிடைத்த தகவலை பெற்று

இவ்வழக்கின் சட்டப்பிரிவினை 279, 337 இதச விலிருந்து 279, 304(A) இதச ஆக பிரிவு மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாற்று அறிக்கை தாக்கல் செய்தேன். அந்த சட்டப்பிரிவு மாற்று அறிக்கை அ.சா.ஆ.7 ஆகும். பின்னர் இவ்வழக்கு கோப்பினை மேல்விசாரணைக்காக மேற்று காவல் நிலைய ஆய்வாளர் திருமதி.பேபி அவர்களிடம் ஒப்படைத்தேன். அவரது விசாரணைக்கு உதவியாக இருந்தும் அவரால் பிரேத விசாரணை முடித்து கொடுக்கப்பட்ட காமராஜ் உடலை பிரேத பரிசோதனைக்கு ஆட்படுத்தினேன். பிரேதத்தினை உடல்கூராய்வு செய்ய பிரேத பரிசோதனை செய்ய ஆஜர்ப்படுத்தி பிரேத பரிசோதனை செய்யப்பட்ட காமராஜ் உடலை அவரது தம்பி கணேசனிடம் ஒப்படைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :

3) 02.12.2022 அன்று வழக்கு சம்பவம் நடைப்பெற்றது. நான் 03.12.2022 அன்று வழக்கு பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கை நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாள் 06.12.2022 ஆகும். புகார் வாக்குமூலம் கணேசன் எழுதினார். புகார் வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளில் கீழ்பகுதியில் இடது ஓரமாக செல்லும்போது அடையாளம் தெரியாத வாகனம் என்ற வார்த்தை அடிக்கப்பட்டு ஆட்டோ என்று சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி செல்லும்போது ஏசி பஸ் நிறுத்தம் வடக்கு பக்கமாக உள்ளது என்றால் சரிதான். சம்பவ இடத்தில் சிசிடிவி பதிவுகளை பார்வையிட்டேன், ஆட்டோ நம்பர் தெரியாததால் தாக்கல் செய்யவில்லை. நான் சம்பவ இடம் செல்லவில்லை என்றாலும், சாட்சிகளை விசாரிக்கவில்லை என்றாலும், என்னால் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள்

அனைத்தும் பிற்பாடு காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் சரிவர விசாரணை செய்யாமல் எதிரி மீது தவறான இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

மறு விசாரணை : இல்லை.

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by her to be Correct.*

*Sd/S.Mahalakshmi,*
*Chief Judicial Magistrate,*
*Thanjavur at Kumbakonam.*